21.04.2026

சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண் - II, திருச்சிராப்பள்ளி
(மோட்டார் வாகன விபத்து நட்ட ஈடு கோரும் தீர்ப்பாயம்)

**எம்.சி.ஓ.பி. எண். 994/2022**

**எ.ம.சா. - 3**

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ம் நாள் 1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி உதவியாளர் திரு. எம். கனகலிங்கம் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ஸ்ரீ**ஜித்மோகன் | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | | வட்டம் | |
| வயது | | கிராமம் | |

**முதல் விசாரணை (எதிர்மனுதாரர் தரப்பில்) :**

நான் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் அதை படித்து பார்த்து புரிந்து கொண்டு கையொப்பமிட்டுள்ளேன். அதை ஏற்றுக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

1. பாலிசி காப்பீடு விதிமுறைகளுடன் எ.ம.சா.ஆ.1

2. 1 ம் எதிர்மனுதாரருக்கும், 1 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கும் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு எ.ம.சா.ஆ.2.

3. வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு செய்ய இயலாமல் திருப்பப்பட்ட தபால் உறை எ.ம.சா.ஆ.3.

ஆகியவை குறியீடு செய்யப்படுகிறது.

**குு.வி (மனுதாரர் தரப்பில்)**

விபத்தில் சம்மந்தப்பட்ட 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பாலிசி Package policy என்றால் சரிதான். விபத்து தேதியில் பாலிசி நடைமுறையில் இருந்தது என்றால் நிபந்தனைக்குட்பட்டு நடைமுறையில் இருந்தது. விபத்தில் இறந்து போனவர் பாலிசியை பொறுத்தவரை 3 ம் தரப்பினர் என்றால் சரிதான். புலன் விசாரணை அலுவலர் நிறுவனத்திற்கு கொடுத்த புலன் விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். புலன் விசாரணை அறிக்கை

21.04.2026

மனுதாரருக்கு சாதகமாக இருப்பதால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கிறது என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.2,3 ஆவணங்கள் முறையான முகவரிக்கு அனுப்பியிருந்தால் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்திருப்பார் என்றும், தவறான முகவரிக்கு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. மனுவிலும் பாலிசியிலும் குறிப்பிட்ட முகவரிக்கு தான் அனுப்பினோம்.

இறந்து போனவர் சர்க்கரை நோயாளி என்றும் முதல்விசாரணையில் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இறந்து போனவர் விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் தான் இறந்து போனார் என்றும், அவருக்கு சர்க்கரை வியாதியோ, வேறு வியாதிகளோ இறப்பை ஏற்படுத்தும் அளவிற்கு இல்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போனவர் 3ம் தரப்பினர் என்பதால் எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. பாலிசி விதிமுறை மீறல் இருப்பதாலும் விபத்து காயத்தால் இறக்கவில்லை என்பதாலும் இழப்பீடு கொடுக்க வேண்டியது இல்லை. அவ்வாறு நான் தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கும் எங்கள் நிறுவனத்திற்கும் இடையில் தான் ஒப்பந்தம் என்றால் சரிதான். அது 3ம் தரப்பினரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சாட்சியம் அளித்ததை தட்டெழுத்தருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு, அவரது கையொப்பம் பெறப்பட்டது.

சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.II,
திருச்சிராப்பள்ளி.